பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை 31.07.2022 கதிர் 157

### தரம் 1 இற்கு மாணவர்களை இணைக்கும்

## விண்ணப்பம் கையளிக்கும் காலம் ஆக. 15 வரை நீடிப்பு!

2023ஆம் ஆண்டுக்கு தரம் 1 இற்கு மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்களைக் கையளிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதி வரை குறித்த விண்ணப்பங்களைக் கையளிக்க முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# கைது வேட்டையை உடன் நிறுத்துங்கள்!

### ரணிலிடம் அநுர வலியுறுத்து



அமைதியான போராட்டக்காரர்களை அடக்கி வேட்டையாடும் கோழைத்தனமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

கைது நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

☞2

# கொட்டாஞ்சேனையில் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை – விவேகானந்த வீதியைச் சேர்ந்த 51 வயதான நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.




உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசிய பிரச்சினைக்கு சர்வகட்சி அரசே தீர்வு

## முழு ஆதரவு வழங்குவோம் சம்பந்தன் அதிரடி அறிவிப்பு




**தேசிய பிரச்சினைகள் தீர வேண்டுமெனில் சர்வகட்சி அரசு மிகவும் அவசியம். இதற்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.**

☞2

# மகாநாயக்க தேரர்களின் அறிவுரையை மதிப்பேன்!

### ஜனாதிபதி ரணில் நேரில் உறுதி



எமது பௌத்த தர்மத்தைப் பாதுகாக்கும் பணியையும் நாம் மறக்க மாட்டோம். மகாநாயக்க தேரர்களின் அறிவுரைக்கும், கொள்கைக்கும் அமைய நான் செயற்படுவேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மகாநாயக்க தேரர்களை நேரில் சந்தித்து உறுதி வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில்,

ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு, சம்பிரதாயபூர்வமாக, நான் செய்ய வேண்டிய இரண்டு கடமைகள்

☞2



# பட்டினியில் ஒரு இலட்சம் குடும்பங்கள்

இலங்கையில் ஒரு இலட்சம் குடும்பங்கள் தினமும் உணவு கிடைக்காமல் பட்டினியில் வாடுகின்றன என்று உணவு பாதுகாப்புக் குழுவின் தலைவர் கலாநிதி சுரேன் படகொட தெரிவித்துள்ளார்.

☞2

# கிராம அலுவலர் பிரிவு ரீதியாக எரிபொருள் விநியோக ஒழுங்கு

### நாளை இறுதி முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கிராம அலுவலர் பிரிவுகளை ஒதுக்கி, அதன் ஊடாக எரிபொருள் விநியோகிப்பதன் சாத்தியம் குறித்து மாவட்ட செயலர் க.மகேசன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.சிவதரனுடன் ஆராய்ந்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற

☞2



### எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில்

# சண்டித்தனம் காட்டிய 13 பேர் சிக்கினார்கள்!


நாடு முழுவதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட மேலும் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹுங்கம, யக்கல, பாதுக்க, கல்கமுவ, காத்தான்குடி, இமதுவ, கரன்தெனிய, கட்டான மற்றும் பொலன்னறுவை உள்ளிட்ட பகுதிகளிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

# விசேட வைத்தியர்களின் கட்டாய பயிற்சி நிறுத்தம்

### சுகாதாரத்துறையில் பாரிய நெருக்கடி என்று எச்சரிக்கை




கட்டாய பயிற்சிக்காக விசேட வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக எதிர்காலத்தில் சுகாதாரத்துறையில் பாரிய நெருக்கடிகள் உருவாகும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

☞2

# பஸ் மோதி இளைஞர் உயிரிழப்பு

மட்டக்களப்பு–வாழைச்சேனை பிரதான வீதி மொறக்கொட்டாஞ்சேனை விஷ்ணு ஆலயத்துக்கு அருகில் வீதியால் நடந்து சென்ற இளைஞர் மீது இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மோதியுள்ளது.

இந்த விபத்தில் நடந்து சென்ற இளைஞர்

☞2

### கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பிலேயே இந்த விடயம் ஆராயப் பட்டுள்ளது.

நாளை முதல் வாகன இறுதி இலக்கங்கள் அடிப்படையில் அல்லாது 'கியூ.ஆர்' முறையில் மாத்திரமே நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம் இடம் பெறவுள்ளது.

அனைவருக்கும் எரிபொருள் கிடைப் பதை உறுதி செய்வதற்கும், நேர விர யத்தை தவிர்ப்பதற்கும் யாழ். மாவட்டச் செயலர் தீவிரமாக ஆராய்ந்து வருகின் றார். அதன் அடிப்படையில் கிராம அலு வலர் பிரிவு ரீதியாக எரிபொருள் விநியோ கத்தை ஒழுங்கமைப்பதன் ஊடாக இவை இரண்டையும் சாத்தியமாக்க முடியும் என்று நம்பப்படுகின்றது.

ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலை யத்தையும் சூழவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நேரம் ஒதுக்கப்படும். அந்த நேரத்துக்குள் அங்கு வசிக்கும் மக்கள் தமது வாகனங்களுக்கான எரிபொருளை குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத் தில் பெற்றுக்கொள்ள முடியும். அவர்க ளின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வகை யில் எரிபொருள் அட்டையை, அடையாள அட்டையாகப் பயன்படுத்த முடியும்.

ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு வாரத்தில் ஒரு நாள் மாத்திரமே ஒதுக்கப் படும். தேசிய ரீதியிலான 'கியூ.ஆர்' நடை முறைக்கு அமைவாக எரிபொருள் விநி யோகிக்கப்படும்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் பவுஸர் எப் போது வரும் என்ற விவரத்தை வெளியி டுவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

எரிபொருள் பவுஸர் வந்தடைந்த மறுநாளே குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலையிலிருந்து மாலை வரையில் பிரதேச செயலகத்தின் கண் காணிப்பில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்கும் என்றும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையத் தில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனியான வரிசையைப் பேணுவது தொடர்பிலும், அத்தியாவசிய சேவையி னருக்கு தனியான வரிசையைப் பேணு வது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பான இறுதி முடிவு நாளை எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

### பட்டினியில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி குடும்பத்தினர் தினசரி என்ன சாப்பிடுவது என்று தெரியா மல், உணவு நிச்சயமற்ற நிலையில் இருக்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, 40 ஆயிரம் பேர் 'சேலைன்' மூலம் போஷாக்கை பெறுகின் றனர் என்றும் அவர் அதிர்ச்சித் தகவலை வெளி யிட்டுள்ளார்.

மேலும், தற்போது நிலவும் நெருக்க டிக்கு உரிய தீர்வுகள் உடனடியாக வழங் கப்படாவிட்டால் இந்த நிலைமை மிகவும் மோசமானதாக அமையும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### மகாநாயக்க .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தன. நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிடுதல். அதற்கு முன்னர் சம்பிரதாயபூர்வமாக மல்வத்து – அஸ்கிரி மகா விகாரைகளில் ஆரம்பித்து ஏனைய விகாரைகளில் உள்ள மகாநாயக்க தேரர் களை தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வது. உங்களிடமிருந்து பெற்ற ஆசீர்வாதங்களுக்கும் கிடைத்த சக்திக் கும் நான் குறிப்பாக நன்றி கூறுகிறேன். இந்த நேரத்தில், நீங்கள் வழங்கிய ஆதரவு எனது பணிகளுக்குப் பலமாக அமைந் தது.

உங்களின் அறிவுரைக்கும், கொள் கைக்கும் அமைய நான் செயற்படுவேன். அதற்காக மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட நிறைவேற்று சங்க சபையின் ஒத்துழைப் பும் பொதுமக்களின் ஆதரவும் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கிறேன்.

இப்போது உருவாகியுள்ளது கடைசிச் சந்தர்ப்பமாகும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு பொதுவான திட்டமொன்றையாவது உருவாக்க வேண்டும்.

இந்த வேலைத்திட்டங்களை முன் னெடுப்பதே எமது முதன்மைப் பணியா கும். அவற்றை முன்னெடுக்கும்போது எமது பௌத்த தர்மத்தைப் பாதுகாக்கும் பணியையும் நாம் மறக்க மாட்டோம்.

நாம் இன்று லிச்சவி மன்னன் குழந் தைகளுக்கு கூறிய அறிவுரைகளை பின்பற்றினால் இந்த நாட்டை முன்னேற்ற முடியும். அதில்தான் நமது எதிர்காலம் தங்கியுள்ளது. விசேடமாக நான் உங்க ளுக்கு நன்றி கூறுகின்றேன் – என்றுள் ளது.

### விசேட வைத்தியர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்துள்ளது.

நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக இவ்வாறு வெளி நாட்டு நிபுணர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுவதை சுகாதார அமைச்சு தற்காலி கமாக நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

### தேசிய பிரச்சினைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வகட்சி அரசு அமைக்க ஆதரவு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப் பிய கடிதம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:–

சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கு மாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கடிதம் அனுப்பியுள்ளார். நேற்றுமுன்தி னம்தான் அவரின் கடிதம் வந்தது. அந்தக் கடிதத்துக்கு நான் இன்னமும் பதில் அளிக்கவில்லை.

எனினும், சர்வகட்சி அரசை அமைப் பது தொடர்பில் ஜனாதிபதி நடத்தவுள்ள மாநாட்டில் நாம் பங்கேற்போம். எம்மால் இயன்ற அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

நாட்டினுடைய பிரச்சினை – நாட்டு மக்களுடைய பிரச்சினை தீர வேண்டு மெனில் சர்வகட்சி அரசு மிகவும் அவசியம். இதற்கு எமது பரிபூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

பொருளாதாரப் பிரச்சினை மாத்திர மல்ல அரசியல் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள் எனச் சகல தேசிய பிரச் சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு எம் மால் இயன்ற ஒத்துழைப்பை சர்வகட்சி அரசுக்கு வழங்குவோம்.

ஏனெனில் ஒரு பிரச்சினையைத் தீர்த்து மற்றைய பிரச்சினைகளைத் தீர்க் காது விட்டால் நாட்டில் முன்னேற்றம் ஏற் படாது. ஆனபடியால் அனைத்துப் பிரச்சி னைகளுக்கும் தீர்வுகாண ஜனாதிபதி க்கும் அவர் தலைமையில் அமைய வுள்ள சர்வகட்சி அரசுக்கும் நாங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

எனவே, அனைத்துத் தேசிய பிரச்சினை களுக்கும் ஓர் ஒழுங்கு முறையில் தீர்வைக் காண ஜனாதிபதி தலைமையில் அமை யவுள்ள சர்வகட்சி அரசு முன்வரவேண் டும் – என்றார்.

### கைது வேட்டையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டக்காரர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தால் ஆகஸ்ட் 09ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகும் நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதேவேளை, மக்கள் எதிர்கொள்ளும் எரிபொருள், எரிவாயு, உரம் மற்றும் மருந்துப் பற்றாக்குறையைத் தீர்ப்பதன் மூலம் மட்டுமே போராட்டத்தை நிறுத்த முடியும் என்று ஜே.வி.பியின் நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஊட கங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அடக்குமுறை அல்லது மிரட்டல் மூலம் போராட்டத்தை ஒருபோதும் நிறுத்த முடியாது. அது அரசியல் நெருக்கடியை மோசமாக்கும். அரசியல் நெருக்கடி மோசமடைந்தால், பொளாதார நெருக்க டிக்கான தீர்வுகளும் தாமதமாகும் – என் றார்.

### பஸ் மோதி ..........



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு 11மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாவடிவேம்பு, 2ஆம் பிரிவைச் சேர்ந்த 27 வயதுடைய வேணு கோபலன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று சந்திவெளி பொலிஸார் தெரிவித்த னர்.

கைதான சாரதியை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை சந்திவெளி போக்குவரத்துப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மோசமான பின்விளைவு

**நாட்டின் மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் விளைவுகள் குறித்து அதிர்ச்சி தரும் புள்ளிவிவர அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கின்றது.**

**வேறு வழி இல்லாமல் மக்கள் வயிற்றுப்பாட்டுக்காக விபச்சாரத்தில் ஈடுபடும் கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள் என்ற அவல நிலைமை பற்றி இந்திய செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டு இருக்கின்றது.**

**அந்தச் செய்தி உற்றுக் கவனிக்கப்பட வேண்டியதாகும். பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாடும் மக்களும் நீண்டெழுவது எவ்வளவு தூரம் அவசியமானது – அவசரமானது என்ற யதார்த்தப் புறநிலையையே அந்தச் செய்தி உணர்த்தி நிற்கிறது.**

**பொருளாதார நெருக்கடி மக்களின் வாழ்வியலின் ஒவ்வொரு அங்கத்தையும் – வாழ்வியல் விழுமியங்கள் வரை – தாக்கி அழித்து நிற்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் ஓர் அபாய எச்சரிக்கை இந்த செய்தி.**

**“பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில், பெண்கள் கடும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர் எனவும், வாழ்வாதாரத்திற்காக அவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர் எனவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 22 மில்லியன் மக்கள் பாரிய கஷ்டங்களையும் வறுமையையும் எதிர்கொள்கின்றனர் என இந்திய செய்தி நிறுவனமான ஏ.என்.ஐ. சுட்டிக்காட்டியுள்ளது.**

**உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான அன்றாடப் போராட்டத்தினால் பல இலங்கையர்கள் வீட்டில் தினசரி வழமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கூட சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், பெரும்பாலான பெண்கள் ஆடைத் துறையில் வேலை இழந்துள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

**இந்த ஆபத்தான நிலையைக் கருத்தில் கொண்டு தற்காலிக விபச்சார விடுதிகள் உருவாக்கப்பட்டு, பெண்கள்பாலியல்தொழிலாளிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பாலியல் உரிமைகளுக்காக செயற்படும் குழுவான** Standup Movement **இலங்கை, இந்திய செய்திச் சேவை தெரிவித்துள்ளது.**

**கடந்த மாதத்தில் இலங்கையில் விபச்சாரத்தில் 30 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

**பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்கள் வேலையிழந்துள்ள நிலையில், ‘ஸ்பாக்கள்’ மற்றும் ஆரோக்கிய மையங்களில் வேலை செய்து பாலியல் தொழிலாளிகளாக வருமானம் ஈட்டுகின்றனர்” – என இது தொடர்பாக அந்தச் செய்தி சேவை மேலும் தெரிவித்துள்ளது.**

**நாட்டின் பொருளாதார நெருக்கடி எத்தகைய மோசமான பின்விளைவுகளைத் தரப்போகின்றது என்பது இதனால் அம்பலமாகியுள்ளது.**

# இலங்கை தனது தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும்!

## சமந்தா பவர் அறிவுரை



இலங்கையின் தற்போதைய பொருளாதார அரசியல் நெருக்கடிக்குக் காரணமான தீர்மானங்களை இலங்கை திருத்திக்கொள்ள வேண்டும் என யு.எஸ்.எயிட்டின் தலைமை நிர்வாகி சமந்தா பவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கான விஜயத்தின்போது இதனைத் தெரிவித்துள்ள அவர், இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி மற்றும் இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பாகப் பைடன் நிர்வாகமும் இந்தியாவும் கவலை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பல மாதங்களாக இலங்கை மக்களுக்கு எவ்வாறு உதவிவழங்க முடியும் என்பது தொடர்பான உயர்மட்ட பேச்சுகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். நாங்கள் முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா வழங்கியுள்ள 300 கோடியே 50 லட்சம் டொலர் கடனுதவி மிகவும் பெறுமதி வாய்ந்தது யு.எஸ்.எயிட் வழங்கும் மனிதாபிமான அபிவிருத்தி உதவிகளும் அமெரிக்கா வழங்கும் உதவிகளும் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடனுதவி வழங்கியவர்கள் இணைந்துகொள்வது அடிப்படையில் அவசியமானது எனவும் சமந்தா பவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தற்போதைய நெருக்கடிக்கு காரணமான – கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட பொருளாதார அரசியல் தீர்மானங்களை திருத்திக்கொள்வதும் முக்கியம் என சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நெருக்கடி முன்னைய அரசாங்கம் நிதியை தவறாக முகாமைத்துவம் செய்தது –ஊழல் –புத்திசாலித்தனமற்ற விவசாய கொள்கைள் –கொவிட் நெருக்கடி உட்பட பல்வேறு காரணங்களால் உருவானது எனத் தெரிவித்துள்ள சமந்தா பவர், கொவிட்டுடன் அதேகாலப்பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தராத நிலையை ஏற்படுத்தியது எனவும் தெரிவித்துள்ளார்.

பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் உலகின் எந்த நாட்டு மக்களுக்கும் பயன் அளிக்க கூடியவை எனத் தெரிவித்துள்ள யு.எஸ்.எயிட்டின் தலைமை நிர்வாகி, கடன் பிரச்சினைக்குரிய விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.

பல நாடுகள் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காகக் காத்திருக்கின்றன,அது சரியான விடயம் அது முக்கியமானது. அபிவிருத்திக்கு உட்கட்டமைப்பு முக்கியமானது எனத் தெரிவித்துள்ள சமந்தா பவர், ஆனால் நிதியுதவி பெறுதல் கடன் பெறுதல் ஆகியவற்றின் விலையானதுஒருவரின்சொந்தஇறையாண்மை மற்றும் சுதந்திரத்தின் மீதான ஆழமான மீறல்களையும் அதிகளவான வட்டி வீதங்களையும் கொண்டுவரும்போது அது காலப்போக்கில் சிக்கலாக மாறும் என சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

# இரண்டு வாரங்களில் மின்கட்டண அதிகரிப்பு?

இரண்டு வாரங்களில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் உயர்வு தொடர்பாக இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்டிருந்த கட்டணத் திருத்தங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.

சுமார் 50 பொதுமக்கள் பிரதிநிதிகளிடம் வியாழக்கிழமை கருத்துக்களை பெற்றுக் கொண்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், மின்சாரக் கட்டணங்களை அதிகரித்தல், அலகுகளுக்கான கட்டண நிர்ணயம் என்பன தொடர்பாகப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிர்ணயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் இரண்டு வார காலப் பகுதியில் கட்டண அதிகரிப்பு தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும் என ஆணைக்குழுவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மட்டு. வீதிகளில் சைக்கிள்களுக்கு தனியான ஒழுங்கை முறை அமுல்!

(சுதர்)

நாடு முழுவதும் சைக்கிள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், மட்டக்களப்பிலும் சைக்கிள்களுக்கான, பிரத்தியேக ஒழுங்கை அமுலாக்கும் முன்னோடி வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டுவருவதாக மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.







இந்த முன்னோடி வேலைத்திட்டத்துக்கான வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு மாந கர சபையுடன் மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து முன்னெடுத்து வருகின்றது. முதற்கட்டமாக மட்டக்களப்பு நகர் பகுதியிலும், நகரை அண்டிய கல்லடி பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் சைக்கிள்களுக்காக, பிரத்தியேக ஒழுங்கை ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு சைக்கிள்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கான இடமும் சில பகுதிகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து, மட்டக்களப்பு முதல்வர் தியாகராஜா சரவணபவன் கருத்து வெளிடுகையில் –

இந்த ஒழுங்கை முறைமை காலப்போக்கில் மட்டக்களப்பு மாநக சபைக்குட்பட்ட ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படும் எனவும், ஒழுங்கை முறைமையை அனைத்து சைக்கிள் பாவனையாளர்களும் கடைப்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்வரும் நாள்களில் மாவட்டத்தில் விபத்துக்களைக் குறைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

ஞாயிற்றுக்கிழமை 31.07.2022




# ஸ்பெயினில் குரங்கம்மை பாதிப்பு; 2 பேர் உயிரிழப்பு

குரங்கம்மை பாதிப்புக்கு இதுவரை ஆபிரிக்காவுக்கு வெளியே எந்தவொரு நாட்டிலும் உயிர்ப்பலி இல்லை என்ற நிலை இருந்து வந்த சூழலில், இந்த தொற்றுக்கு பிரேஸில் நாட்டில் 41 வயது ஆண் ஒருவர் பலியாகி இருக்கிறார். இவர்தான் ஆபிரிக்காவுக்கு வெளியே குரங்கு அம்மையால் பலியான முதல் நபர் என தகவல்கள் கூறுகின்றன.

கடுமையான நோய் எதிர்ப்பு பிரச்சினைகள் இவருக்கு இருந்ததாக அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன. ஸ்பெயின் நாட்டிலும் ஒருவர் இந்த தொற்றுக்கு பலியாகி இருக்கிறார். குரங்கு அம்மையால் உலகளவில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக ஸ்பெயின் உள்ளது. இந்த நிலையில், ஸ்பெயினில் குரங்கம்மை பாதிப்புக்கு 2வது நபர் உயிரிழந்து உள்ளார். இதனை அந்நாட்டு சுகாதார அமைச்சகம் உறுதி செய்துள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் இது இரண்டாவது உயிரிழப்பு ஆகும். எனினும் உயிரிழந்தவர் பற்றிய அடையாளம் உள்ளிட்ட விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. முதல் நபர் ஸ்பெயினின் கிழக்கே கம்யூனிடேட் வேலன்சியா பகுதியை சேர்ந்தவர். அவருக்கு மூளைக்காய்ச்சல் பாதிப்பும் இருந்துள்ளது.

அடுத்தடுத்து 2 நாள்களுக்குள் ஸ்பெயினில் குரங்கம்மை பாதிப்புக்கு 2 பேர் உயிரிழந்து உள்ளனர். ஸ்பெயினில் குரங்கம்மை பாதிக்கப்பட்ட 4,298 பேரில் 64 பேர் பெண்கள் ஆவர். அவர்களில் 120 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. ஸ்பெயினில் 10 மாத குழந்தை மற்றும் 88 வயது முதியவர் என பல்வேறு வயது தரப்பினருக்கும் இந்த குரங்கம்மை நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டு உள்ளது.


## ரூ.116 கோடி வரி ஏய்ப்பு புகாரில் சிக்கிய பாப் பாடகி கிராவுக்கு 8 ஆண்டு சிறை?



கொலம்பியாவை சேர்ந்த பிரபல பாப் பாடகி கிரா (45), கடந்த 2012 முதல் 2014ம் ஆண்டு வரை ஸ்பெயின் நாட்டில் இருந்தபோது, 116 கோடி ரூபா வருமானத்துக்கான வரி செலுத்தாமல் ஏமாற்றியதாக கூறப்படுகிறது. தவறை ஒப்புக்கொண்டு வரி செலுத்துமாறு ஸ்பெயின் வழக்கறிஞர்கள் சார்பில் கிராவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால், தான் அந்த காலக்கட்டத்தில் ஸ்பெயினில் வசிக்கவில்லை என்றும், தனது காதலன் பார்சிலோனா கால்பந்து வீரர் ஜெரார்டு பிக் (35) என்பவருடன் பஹாமாஸ் நாட்டில் வசித்ததார் எனவும் கூறினார். இதையடுத்து இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது.

இதுபற்றி ஸ்பெயின் நாட்டு வழக்கறிஞர்கள் அமைப்பினர் கூறுகையில், 'பாடகி கிரா 2011ல் ஸ்பெயினில் குடியேறி விட்டார். பஹாமாஸ் நாட்டில் சொந்த வீடு இருக்கிறது. வருமான வரி வழக்கின் மனுவை கிரா நிராகரித்துள்ள நிலையில், அவர்மீதான குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் 8 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் வரி ஏய்ப்புக்காக 150 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படலாம்' என்றனர்.

## விரைவில் ஓய்வு போப் விருப்பம்?



கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மத தலைவராக நியமிக்கப்படும் போப்பாண்டவர்கள், எப்போதும் ஓய்வு பெறுவதில்லை. 600 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2013ல் முறை போப்பாக பதவி வகித்த 16ம் பெனடிக்ட், அப்பதவியை பாதியில் துறந்தார். இதன் பிறகு, போப் பிரான்ஸ் நியமிக்கப்பட்டார். தற்போது, 85 வயதாகும் போப் பிரான்சிஸ் முழங்கால் வலியால் அவதிப்பட்டுவருகிறார். இதனால், அவர் ஓய்வு பெற விரும்புகிறார் என செய்திகள் வெளியாகின.

அதை மறுத்த போப், கனடா நாட்டிற்கு கடந்த வாரம் பயணம் மேற்கொண்டார். அங்கிருந்து நேற்று நாடு திரும்பும் வழியில் விமானத்தில் பேட்டி அளித்த அவர், '' உடல் அளவில் நான் வேகம் இழந்து விட்டேன். சக்கர நாற்காலியிலேயே இனி அனைத்து இடங்களுக்கும் சுற்றி வர முடியாது. , ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என்றாலும், அதற்கான கதவுகள் திறந் திருக்கின்றன. நீங்கள் வேறு போப்பாண்டவரை மாற்றலாம். அது விசித்திரமானதோ, பேரழிவு ஏற்படுத்தக் கூடியதோ அல்ல,' என தெரிவித்தார்.

## பாகிஸ்தானை உலுக்கும் தீவிரவாத தாக்குதல்கள்


# ஆறு மாதத்தில் 323 வீரர்கள் சாவு



பாகிஸ்தானில் 6 மாதங்களில் 434 தீவிரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன எனவும், 323 வீரர்கள் வீரமரணம் அடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டு உள்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்தியாவில் தீவிரவாத தாக்குதல்கள் நடத்துவதற் காக, பல்வேறு தீவிரவாத அமைப்புகளை பாகிஸ்தான் ஊக்குவித்து வருகிறது. தனது நாட்டில் புகலிடம் அமைத்து, நிதியுதவி, ஆயுத பயிற்சி அளித்து காஷ்மீருக்குள் அனுப்புகிறது. தற்போது, தன்வினை தன்னையே சுடும் என்பது போல், பாகிஸ்தானுக்கு இதே தீவிரவாத அமைப்புகளால் அதற்கு தலைவலி அதிகமாகி இருக்கிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் மேலவையில் உள்துறை அமைச்சகம் சமர்ப்பித்த அறிக்கையில், 'கைபர் பக்துன்க்வா மாகாணம் பாதுகாப்புப் படையினர் மீது அதிக எண்ணிக்கையிலான தீவிரவாதத் தாக்குதல்கள் நடந்துள்ளன. நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுமார் 247 தாக்குதல்கள் நடந்துள் ளன. பலுசிஸ்தானில் 171 தீவிரவாத தாக்குதல்களும், சிந்துவில் 12 தாக்குதல்களும் நடந்துள்ளன. குறைந்தபட்சமாக பஞ்சாப்பில் ஒன்று, இஸ்லாமாபாத்தில் 3 தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. மொத்தம் 6 மாதங் களில் 434 தாக்குதல்கள் நடந்துள்ளன. தீவிரவாத தாக்குதல்களில் குறைந்தது 323 பாதுகாப்புப் படைகள் மற்றும் பிற நிறுவனங் களைச் சேர்ந்த வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். 718 வீரர்கள் காயமடைந்து உள்ளனர்' என்று கூறப்பட்டுள்ளது.

## சீன ராணுவத்துக்கு நம்பகமான தளபதி தொடர்பாக ஆய்வு



சீன ராணுவம் நிறுவப்பட்டதின் 95வது ஆண்டு விழா நாளை கொண்டாடப்படுகின்றது இதனை முன்னிட்டு ராணுவ உத்திகளை வலுப்படுத்துவது குறித்து கடந்த வியாழன்று நடந்த ஆய்வுக் கூட்டத்தில் அதிபர் ஜீ ஜின்பிங் பேசுகையில், 'தேசிய பாதுகாப்பில் நிச்சயமற்ற தன்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சீனா எதிர்கொண்டு வருகின்றது. உலகின் மிகப்பெரிய ராணுவமான சீன ராணுவத்துக்கு நல்ல தலைமை இருக்க வேண்டும். அவர் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விசுவாசமானவராகவும், நம்பகமான மக்கள் சீன ராணுவத்தை திறமையாக வழி நடத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும்,' என்று தெரிவித்தார்.



## ரூ.1,600 கோடி மோசடி; நீதிமன்றத்தில் பாக். பிரதமர் ஆஜராக உத்தரவு

பாகிஸ்தான் பிரதமராக உள்ள பொஸ் ஷெரீப் குடும்பத்தினர் 28 பினாமி கணக்குகள் மூலமாக ரூ.1,600 கோடி பண மோசடி செய்ததாக கடந்த 2020ம் ஆண்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதில், பொஸ், அவருடைய மகன்கள் ஹம்சா (47), சுலேமான் (40) ஆகி யோர் மீது குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

சுலேமான் வெளிநாட்டிற்கு தப்பி விட்டார். பொசும், ஹம்சாவும் முன்ஜாமீன் பெற்றிருந்தனர். இந்த வழக்கில் குற்றச்சாட்டை பதிவு செய் வதற்காக பொஸ் ஷெரீப்பும், ஹம்சாவும் வரும் செப்.7ம் திகதி நேரில் ஆஜராகும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மாணவர்களின் தாய்மொழியை இழிவாக பார்க்கும் பாடசாலைகள் குறித்து வெங்கையா நாயுடு கவலை



ஹைதாராபாத்தின் ராமந்தபூர் நகரில் பாடசாலைப் பொன்விழாக் கொண்டாட்டங்களை தொடங்கி வைத்து இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு உரையாற்றியிருந்தார்.

தேசியக் கல்விக் கொள்கையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆக்கபூர்வமான வகையில் மாணவர்களின் முழு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்க வேண்டும். சில பாடசாலைகள் மாணவர்களின் தாய்மொழியை இழிவாகப் பார்க்கின்றன. ஆங்கிலத்தில் பிரத்தியேகமாகப் பேசவும் கற்கவுமே அவர்களை ஊக்குவிக்கின்றன.

தாய் மொழியில் கல்வியைக் கற்றுக் கொள்வது, சுதந்திரமாகத் தொடர்பு கொள்ள உதவும், சுயமரியாதையை அதிகரிக்கும். சொந்த கலாசார உணர்வை மாணவர்களுக்கு வழங்கும். முதன்மை நிலையில் உள்ள பயிற்று மொழியை தாய்மொழிகளுக்கு மாற்றவும், படிப்படியாக உயர்நிலைகளுக்கும் விரிவுபடுத்தவும் வேண்டும்.

நமது குழந்தைகளின் ஆளுமையை வடிவமைப்பதில் தாய்மொழியின் முக்கியத்து–வத்தை தவிர்க்க முடியாது. நேரம் தவறாமை மற்றும் ஒழுக்கம் ஆகியவை வெற்றிக்கான மிக முக்கியமான பண்புகள். உயர் இலக்கை அடையவும், வாழ்க்கையில் முன்னேறவும் மாணவர்கள் கடினமாக உழைக்க வேண்டும். கடின உழைப்புக்கு ஈடு இல்லை, என்று அவர் தனது உரையின்போது தெரிவித்தார்.

## பாதுகாப்புப் படையினரின் தேடுதலின்போது லஷ்கர் இ தொய்பா நபர் சுட்டுக் கொலை



ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் உள கிடைத்த தகவலின் பேரில், இந்திய பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது பட்டான் பகுதியில் பதுங்கியிருந்த நபர் ஒருவர் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து, பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் எனவும், இந்தத் தாக்கு தலில் இர்ஷாத் அகமது பட் என்ற நபர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு படையினர், ஏ.கே. ரக துப்பாக்கி மற்றும் குண்டுகள் உள்ளிட்டவற்றை கைப்பற்றியதாகவும், இர்ஷாத் அகமது என்ற அந்த நபர் லஷ்கர் இ தொய்பா அமைப்பை சேர்ந்தவர் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் காஷ்மீர் மண்டல காவல்துறை தெரிவித்துள்ளது.



## விலை உயர்வைக் கண்டித்து ஓகஸ்ட் 5 இல் நாடுமுழுவதும் காங்கிரஸ் கட்சி ஆர்ப்பாட்டம்

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வேண்டும் எனக் கோரி, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. இதையடுத்து, அவை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தினர் என இதுவரை 25க்கும் மேற்பட்ட எம்.பிக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் விலைவாசி உயர்வு, வேலையின்மை, பணவீக்கம் ஆகியவற்றைக் கண்டித்து ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படும் என காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. இதன்போது பிரதமர் இல்லத்தை முற்றுகையிடவும் முடிவு செய்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.





## மதுரையில் நள்ளிரவில் கொட்டியது கனமழை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் வெள்ளம்

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் கடந்த சில நாள்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. குறிப்பாக நள்ளிரவில் அதிக மழை பெய்துள்ளது.

மதுரையில் நேற்று இரவு பெய்த பலத்த மழையில் நகர் முழுவதும் மழை வெள்ளத்தால் தத்தளித்தது. இந்தப் பலத்த மழையினால் மீனாட்சி அம்மன் கோவிலுக்குள்ளும் தண்ணீர் புகுந்தது. அதில் சுவாமி சன்னதி கொடி மரம் பகுதி மற்றும் ஆடி வீதிகளில் அதிகளவு தண்ணீர் தேங்கியது. இதனால் நேற்று இரவு ஆடி முளைக்கொட்டுத் திருவிழாவில் மீனாட்சி அம்மன் வீதி உலா கோவிலுக்குள்ளேயே நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரயில் நிலையத்துக்கு எதிரே உள்ள மேலப் பெருமாள் மேஸ்திரி வீதிப் பகுதியில் மழைக்காக மரத்தடியில் ஒதுங்கியிருந்த வயதான தம்பதியினர் இறந்து போனமை தெரியவந்துள்ளது. பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

## சிவசேனா மூத்த தலைவர் சஞ்சய் ராவத் வீட்டில் நிலமோசடி வழக்கில் அமுலாக்கத்துறை சோதனை



1,034 கோடி ரூபா நிலமோசடி தொடர்பான வழக்கில் சிவசேனா கட்சியின் மூத்த தலைவரும் எம்.பியுமான சஞ்சய் ராவத் மீது அமுலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக இம்மாத தொடக்கத்தில் அமுலாக்கத்துறை முன் சஞ்சய் ராவத் நேரில் ஆஜரானார். அவரிடம் இந்த வழக்கு குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன.

இதற்கிடையில், இந்த வழக்கில் ஜூலை 20 ஆம் திகதி ஆஜராகும்படி சஞ்சய் ராவத்திற்கு அமுலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியது. ஆனால், அந்த திகதியில் சஞ்சய் ராவத் ஆஜராகவில்லை. அதைத்தொடர்ந்து 27 ஆம் திகதி ஆஜராகும்படி அமுலாக்கத்துறை சஞ்சய் ராவத்திற்கு மீண்டும் நோட்டீஸ் அனுப்பியது. ஆனால், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நடைபெற்று வருவதால் அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்குப் பின்னர் ஆஜராவதாக சஞ்சய் ராவத் அமுலாக்கத்துறைக்கு அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், மும்பையில் உள்ள சஞ்சய் ராவத் வீட்டில் இன்று காலை முதல் அமுலாக்கத்துறையினர் சோதனை நடத்தியுள்ளனர். நிலமோசடி வழக்கு தொடர்பாக ஆவணங்களைச் சேகரிக்கும் விதமாகவே இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் மராட்டியத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சைக் கருவிகள்

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவின் வசதிகளை மேம்படுத்தும் வகையில் அதி நவீன கண் சத்திர சிகிச்சை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறை பொதுமக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஷ் அஷ்ஷூரா, உலமா சபை என்ற முச்சபைகளின் வழிகாட்டலின் கீழ் பொதுமக்களினால் அன்பளிப்பாகவழங்கப்பட்ட 1கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட கண் சத்திர சிகிச்சை உபகரணங்களை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் தலைவர் வைத்தியர் ஏ. இஸ்ஸடீன் தலைமையில் வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாககலந்துகொண்டு உபகரணத்தொகுதியை வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவிற்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக்,கல்முனைப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம் றிபாஸ், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அப்துல் வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம்.ஹனிபா, முச்சபைகளின் பிரதிநிதிகள், உலமாக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்,தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பள்ளிவாசல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மனைவியைக் கடத்திய கணவன் பெற்றோருடன் விளக்கமறியலில்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரம் பிரதேசத்தில் விவாகரத்து கோரி நீதிமன்றில் வழக்கு தாக்குதல் செய்துவிட்டு பெற்றோருடன் வாழ்ந்து வரும் தனது மனைவியை வீடு புகுந்து கடத்திச் சென்றவர் என்று கூறப்படும் பெண்ணின் கணவர் மற்றும் அவருடைய பெற்றோர் கைது செய்யப்பட்டனர். மூவரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் அதே பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரை ஆறு மாதத்திற்கு முன்னர் திருமணம் முடித்துள்ளார்.

இந்தநிலையில் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கணவனைவிட்டு பிரிந்து சென்று தனது பெற்றோருடன் வாழ்ந்து வருகின்ற மனைவி, கணவனிடம் இருந்து விவாகரத்து கோரி அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ தினமான நேற்று முன்தினம் காலையில் அந்தப் பெண்ணின் வீட்டிற்கு வந்த கணவர் அவரது பெற்றோர் உட்பட 3 பேர் பெண்ணின் தாயார் மற்றும் அவரது இரு சகோதரிகளை தாக்கிவிட்டு பெண்ணைக் கடத்திக் கொண்டு சென்று தமது வீட்டின் அறையில் பூட்டி வைத்துள்ளனர்.

இந்த தாக்குதலில் பெண்ணின் தாயார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் பெண்ணைக் கடத்திச் சென்றவர்களின் வீட்டை முற்றுகையிட்டு பெண்ணை மீட்டமையுடன் கடத்தலில் ஈடுபட்ட பெண்ணின் கணவர் அவரது பெற்றோர் உட்பட 3 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 3 பேரும் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை திங்கட்கிழமை வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஆலையடிவேம்புஆற்றுமுகம் நேற்று அகழ்ந்துவிடப்பட்டது



அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேசசெயலகத்திற்குட்பட்ட சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிரதேசம் நேற்று (30 ஆம் திகதி அகழ்ந்துவிடப்பட்டது.

வடிச்சல் நீர் அதிகரிப்பு காரணமாக ஆற்றை அண்டிய வயல் பிரதேசங்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன எனவும், இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன எனவும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து, கள நிலைவரத்தை ஆராய்ந்த பின்னரே ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் சின்னமுகத்துவார ஆற்றுமுகப்பிரதேசத்தை அகழ்ந்து மேலதிக நீரை வெளியேற்றி வயல் நிலங்களை அறுவடை செய்து விவசாயிகளைப் பாதுகாக்கும் முகமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.






# கல்முனையிலிருந்து தினமும் கதிர்காமத்திற்கு பஸ் சேவை

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனையில் இருந்து கதிர்காமத்திற்கு தினமும் பஸ் சேவை ஆரம்பமாகி இருக்கின்றது என்று கல்முனை போக்குவரத்து சாலையின் அத்தியட்சகர் பி.ஜௌபர் தெரிவித்தார்.

ஒரு வழி பாதை பயணத்திற்கான கட்டணம் 1,550 ரூபா. முற்பதிவுக்கு முப்பது ரூபா. காலையிலே ஆறு மணி ,ஏழு மணிக்கு இரண்டு பஸ்கள் புறப்படுகின்றன.

அதேபோன்று கதிர்காமத்தில் இருந்து காலை 8 மணிக்கு ஒரு பஸ் புறப்படுகின்றது.

இதேவேளை உகந்தை மலை முருகன் ஆலயத்திற்கான பஸ் சேவை தினமும் நடைபெற்று வருகின்றது. அதற்கான பஸ் கட்டணம் 1,025 ரூபா.

40 பேர் சேர்ந்து தனியாக ஒரு விசேட பஸ் பெற்று கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கதிர்காமத்தில் போக்குவரத்து சபைக்கான முன்பதிவு காரியாலயம் நேற்று முன்தினம் இருந்து இயங்க தொடங்கி இருக்கின்றது.

அங்கிருந்து கல்முனை பஸ் சாலை அத்தியட்சகர் பி. ஜாஃபர் எமக்கு இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆசிரியர்கள் எரிபொருள் பெறுவதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்குக!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

மாவட்ட செயலர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வாகனங்களுக்கான எரிபொருளை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை வகுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

நீண்டகாலமாகப் பாடசாலைகள் பூட்டப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டமை நீங்கள் அறிந்ததே. கொரோனா நோய் ஒருபுறம் பொருளாதார, போக்குவரத்து நெருக்கடி இன்னொரு புறம் எரிபொருள் தட்டுப்பாடு பூதாகாரம். இவை எல்லாமே இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைக் குழந்தைகளையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

இத்தகைய நிலைமைகளைச் சீர்செய்ய முடியாமல் இருக்கின்றது. பல வழிமுறைகள் இருந்தும் அவற்றை நாம் தட்டிக்கழித்தே வருகின்றோம்.

இப்போதுள்ள மிக முக்கியமான பிரச்சினை எரிபொருள் பிரச்சினை. இதனால் பொதுப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்துமே செயலிழந்த நிலையில் உள்ளன.

விசேடமாக ஆசிரியர்களின் போக்குவரத்து மார்க்கங்கள் முற்றாக ஸ்தம்பித்துள்ளன. மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

இந்த வழிமுறையை மத்திய கல்வி அமைச்சிடம் நாம் முன்வைத்து அதனை நடைமுறைப் படுத்துவதாக கல்வி அமைச்சர் உறுதிப்படுத்தியதன் அடிப்படையில் அந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இதே போன்று ஆசிரியர்களின் போக்குவரத்துக்கும் வழியைக் கண்டறிய வேண்டும். இன்று சகல மாகாணங்களிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாவட்டச் செயலாளர்களின் கண்காணிப்பில் உள்ளன.

ஆகையால் மாவட்டச் செயலாளர்கள் உங்களின் மாவட்டத்தில் உள்ள பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வாகனங்களுக்கான எரிபொருளை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை வகுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முன்மாதிரியாக அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஒதுக்கீடு செய்து நடைமுறைப் படுத்தியுள்ளமை பாராட்டுக்குரியது.

ஆகையால் சகல மாவட்ட அரசாங்க அதிபர்களும் தயவு செய்து மாணவர்களின் நலன் கருதி இந்த ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.




## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் நிதியுதவி!

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூட திருத்த வேலைகளுக்கென வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக ஒரு லட்சம் ரூபா நேற்று (சனிக்கிழமை) கையளிக்கப்பட்டது.

கனடாவில் உள்ள இந்தியன் றெஸ்ரோரன்ற் உரிமையாளர் சாம் அவர்களின் நிதியுதவியில் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக் கூடத்தில் சிறு திருத்தவேலைகளுக்காக இந்த நிதியை சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் க.தினேஷ், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் லயன் சி. ஹரிகரனிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க உப செயலாளர் சோ.செல்வரத்னம் மற்றும் த.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## எரிபொருள் விநியோகம் நிறைவடைந்ததன் பின்னர் வரிசைகளில் காத்திருக்கவேண்டாம்!

வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்துக்கமைய, எரிபொருள் விநியோகம் நிறைவடைந்ததன் பின்னர் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனிய எண்ணெய் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் உப தலைவர் குசும் சந்தநாயக்க, பொதுமக்களிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கியு.ஆர். குறியீட்டு முறைமைக்கு அமைய மாத்திரம், எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வாகனங்களுடன் வரிசைகளில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது. ஆகவே, எரிபொருள் முடிவுற்றதும் வரிசையில் காத்திருக்கவேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான காலம் மேலும் நீடிப்பு

தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விண்ணப்ப படிவங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பின் சில பகுதிகளில் சைக்கிள் பாதைகள் அறிமுகம்

கொழும்பு மாநகர சபையில் நேற்று (சனிக்கிழமை) கொழும்பின் சில பகுதிகளில் சைக்கிள் பாதைகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக சைக்கிள் பாவனையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, கொழும்பில் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு தனியான பாதைகளை அறிமுகப்படுத்துவதற்கு கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகையில் டச்சு வைத்தியசாலைக்கு அருகிலும், ஜனாதிபதி மாவத்தைக்கு அருகில் உள்ள இலங்கை வங்கியிலும், கொழும்பு துறைமுகம் வரையிலான ஆர்மர் வீதியிலும் தனியான சைக்கிள் பாதைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

மேலும் சைக்கிளில் பயணிப்பவர்கள் தமது சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும் கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் கொழும்பின் ஏனைய பகுதிகளிலும் விரைவில் அறிமுகப்படுத்த கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ரயில் மோதி சிப்பாய் பலி

களுத்துறை வடக்கு பிரதேசத்தில் ரயிலுடன் விமானப்படை வான் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மற்றுமொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார். வீரவில விமானப்படை தளத்தில் கடமையாற்றும் வெல்லவாய பிரதேசத்தைச் சேர்ந்த விமானப்படைச் சிப்பாயே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என்று களுத்துறை வடக்குப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தல பிரதேசத்தைச் சேர்ந்த விமானப்படைச் சிப்பாய் படுகாயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

இன்று அதிகாலை 1.33 மணியளவில் குறித்த ரயில், களுத்துறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றது. சம்பவத்தின்போது படுகாயமடைந்த நிலையில் இரு சிப்பாய்களும் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னரே, அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## இலவச மருத்துவ முகாம்

பத்தனை பகுதியில் இலவச மருத்துவ முகாம் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாம் பத்தனை ஜெயசிரிபுரவில் இடம்பெற்றது.

பத்தனை நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு சிகிச்சைகளையும், மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர்.

இந்த நடமாடும் சேவைக்கான அனுசரணையை கொட்டகலை சுகாதார பிரிவினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2022இல் வெளியிடப்பெற்றது.